# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,176 — 1960 අගෝස්තු 5 වැනි සිකුරාදා — 5.8.1960

12,176 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 191 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | 195 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 192 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### வித்தியா பகுதி

**பயிற்சி ஆசிரியை பதவி, அரசினர் ஆசிரியர் கலாசாலை அளுத்துகமம்**

அளுத்துகமம் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் உள்ள பயிற்சி ஆசிரியர் பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் வித்தியாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படும். " வித்தியாதிபதி, (ஆசிரியர் கலாசாலைகள் கிளை), வித்தியா கந்தோர், மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்தில் 1960 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 26 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்..**—இப்பதவிக்கான சம்பள விகிதம் பின்வருமாறாகும் :

ரூ. 1,776—7 × 72—9 × 120— ரூ. 3,360, வருடாந்தம்.

3. **தேவைப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தராதரங்களும் :**

(i) விண்ணப்பதாரிகள் பயிற்றப்பட்ட சுயபாஷைத் (1 ம் வகுப்புத் தமிழ்) தராதரப் பத்திரம் பெற்றவர்களாகவும் பயிற்சியை முடித்தபின் 5 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றவர்களாகவும் இருத்தல்வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் பாலர் வகுப்பு முறைகள், கல்வியின் ஆதார விதிகள், இஸ்லாம் ஆகியவற்றைப் படிப்பிக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் 1960 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 26 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்கள் தொர்டர்பில் 50 வயதுக்கு மேற்படலாகாது என்ற கட்டுப்பாடு அமையாது.

(iii) தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசினரின் கீழ் ஒரு நிரந்தர நியமனத்தை வகிக்காதவிடத்து, 3 வருடங்களுக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்.

4. **விசேஷ நிபந்தனைகள் :**

(i) தெரிவு செய்யப்படுபவர், முதலாவதாக, அளுத்துகமம் ஆசிரியர் கலாசாலைக்கு நியமிக்கப்படுவர். ஆயினும், அவர் பின்னர் வேறிடங்களுக்கு மாற்றப்படக்கூடும்.

(ii) கீழே கொடுபட்டுள்ள விதிக்கப்பட்ட மாதிரிப் பத்திர முறையிலேயே விண்ணப்பங்கள் தயாரித்தனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் இக் கந்தோரால் விநியோகிக்கப்படமாட்டா. இவ்வறிவித்தலில் காணும் மாதிரிப் பத்திரத்தைப் பார்த்து விண்ணப்பதாரிகள் பத்திரங்களைத் தயாரிக்க வேண்டும்.

(iii) இப்பதவி, பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ், இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதாகும். இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் ஒருவர், இளைப்பாற்றுச் சம்பளச் சட்டங்களின் கீழ், இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய ஆசிரியர் பதவியை ஏற்கனவே வகிப்பவராயின் அவர் வகிக்கும் வரை இப்பதவி இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதாகும்.

5. பகிரங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பில் அமைபவையும் அரசினர் வர்த்தமானப் பத்திரிகையில் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்படுபவையுமான பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர்.

ஈ. எச். டி அல்விஸ்,
வித்தியாதிபதிக்காக.

கோவை இல. T C A 7866,
வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு ஓகஸ்ற் மீ 1 ந் உ.

### மேலே குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**அளுத்துகமம் அரசினர் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி ஆசிரியை பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————— .
(தெளிவாகக் கொடுக்கவும்)

2. தபால் விலாசம் : ————— .

3. 1960 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 26 ந் திகதியன்று சரியான வயது : ————— . வரு : ———— மா : ———— நா :————

4. (அ) விண்ணப்பதாரியின் சாகியம் : ————— .
(ஆ) இலங்கையராயின், வம்சாவழியிலா பிரசாவுரிமைப் பதிவாகவா : ————— .

5. பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி : ————— .
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————— .
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————— .
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிக்கொப்பாட்டன் : ————— .

6. கல்வித் தராதரங்களும் அவை பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிகளும் : ————— .
(ஆகக் கூடிய கல்வித் தராதரப் பத்திரத்தின் பிரதி இணைத்தனுப்பப்பட வேண்டும்)

7. தொழிற் தராதரங்கள் : ————— .

8. கல்வி கற்ற பாடசாலைகளும் கல்லூரிகளும்—
(கீழ்க்காணும் முறையில்)

| பாடசாலையின் அல்லது கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

9. படிப்பித்தல் அனுபவம் : —
(கீழ்க்காணும் முறையில் விபரங்கள் கொடுபடவேண்டும்)

| பாடசாலையின் அல்லது கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | வகித்த பதவி | சேவைக்காலம் வரு. மா. நா. | விலகிய காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மொத்த சேவைக்காலம்

10. தமிழ் மொழியில் பெற்றுள்ள தராதரம் : ————.

11. நற்சாட்சிப் பத்திரங்கள் அளித்தவர்களின் (சொந்தக்காரர்களா யிருக்கலாகாது) பெயர்களும் அவர்கள் வகிக்கும் பதவிப் பெயர்களும். (சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள்—மூலங்களல்ல— இணைத் தனுப்பப்பட வேண்டும்). பகிரங்க சேவையிலுள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை.

12. வேறு யாதேனும் விபரங்கள் : ———— .

இவ் விண்ணப்பப் பத்திரத்தில் கொடுபட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுபட்டுள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றதென்றேனும் சரியற்றதென்றேனும் நியமனத்திற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் எவ்வித நஷ்ட ஈடுமின்றிப் பதவியிலிருந்து நீக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என்று அறிவேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ———— .

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## அரசாங்க கேள்விப்பத்திரம்

ரூபா 30,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து ஐயம் பெருமாள் குளத்தில் வேலை செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் வடபகுதி நீர்ப்பாசன இஞ்சினியரால் (வவுனியா) 30.8.60 காலை 9.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்தில் (முருங்கன்) பெற்றுக்கொள்ளலாம். 29.8.60 வரைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப் பத்திரத்துக்குரிய ரூபா 50 கச்சேரியில் அல்லது நீர்ப்பாசனக் கந்தோரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காரருக்கே கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

டீ. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னர் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 28 ந் வ.

## நீர்ப்பாசன இலாகா

உறுகாமம் நீர்ப்பாசன உபபிரிவில் உள்ள தொடுவில் ஆற்றில் அணைக் கட்டு கட்டுதற்கு நீர்ப்பாசனப் பகுதியில் ரூபா 21,700 க்கு அல்லது அதற்குமேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ந் திகதி, புதன்கிழமை, காலை 9.30 மணிவரைக்கும் மட்டக்களப்பு கிழக்குப் பிரிவிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இரு பிரதி கொண்ட வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசன உப பிரிவின் நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களிடமிருந்து 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ம் திகதி, செவ்வாய்க்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம் திகதி, புதன்கிழமை, காலை 10 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் பார்வையிடப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினுல் பிரசன்னமாயிருக்கலாம். கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் பெயரில் ரூபா 25 க்குப் பெறுமதியான காசுக்கட்டளையை அல்லது பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. மேற்கொண்டு விபரங்களை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ஜெயசிங்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
உறுகாம உப பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
செங்கலடி, கி.மா.,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 27 ம் வ.

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் ஆவணி மாதம் 24 ம் திகதி (24.8.60) காலை 9.30 மணி வரையும் கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். வட மேல் மாகாண குருணைக்கல் மாவட்டத்திலுள்ள " கக்வட்டுன ஓயாவுக்கு மேல் (முதலாம்பாக) பாலம் அமைத்தல் ".

கேள்விப்பத்திரம் கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் இடம் இருந்து கேள்வித்தாள்களைப் பெற்று இரு தாள்களில் மனுச் செய்தல் வேண்டும். வேலையின் பெயர் இடதுபக்க உறையில் தெளிவாக எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரம் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்தோ அல்லது நேரில் எடுத்தோ அனுப்பவேண்டும். வேண்டிய விபரங்களை கக்வட்டுன ஓய நீர்ப்பாசான பொறியியலாளர் அலுவலகத்தில் பார்க்கலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 30,000 ம் அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டனர் என்று அத்தாட்சி பண்ணும் ஒப்பந்தக் காரருக்கு மட்டுமே நீர்ப்பாசன பொறியியலாளர் ஆவணி மாதம் 23ம் திகதி (23.8.60) நண்பகல் 12 மணி வரையும் கேள்வித்தாள்கள் வழங்குவார். இவர்கள் நீர்ப்பாசன அதிபர் சார்பில் ரூபா 50 இந்த வேலைக்கு முற்பணமாக கச்சேரியில் கட்டி பற்றுச் சீட்டை கேள்வித்தாள்களுக்கு மனுச் செய்யும்பொழுது காட்ட வேண்டும்.

கு. செல்வருசா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கக்வட்டுன ஓயா திட்டம்.

மக்குள் பொத்த, இப்பகமுவ.

## கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை

### காலித் தேனீர்ச்சாலை

காலியிலுள்ள தேனீர்ச் சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1960 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ந் திகதி, புதன்கிழமை, பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். குத்தகை, கப்பற்றுறை ஆணையாளரால் குறிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்காகும்.

2. கொழும்பு கப்பற்றுறை ஆணையாளர் காரியில் ரூபா 25. கட்டுப்பணமாகக் கட்டி அவ்விடமிருந்து பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ம் திகதி நண்பகல் 12 மணி வரை களரி வேலை நேரங்களில் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

எ. எஸ். கோபன்-விக்ரம,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை,
கொழும்பு, 1960 ம் ஆண்டு ஜூலை மீ 22 ந் வ.

## கல்விப் பகுதி

கீழ் குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமாக கேள்விப்பத்திரங்கள் கல்விக்கந்தோர், மட்டக்களப்பு, கேள்விச்சபை அக்கிராசனர் அவர்களால் 1960 ம் ஆண்டு ஆவணி 26 ந் தேதி, வெள்ளிக்கிழமை, மூற்பகல் 10.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| திரி/திரிகோணமலை பிரதம பாடசாலை .. | பெருந்திருத்த வேலை. |

குறிப்பு : திரி = திருகோணமலை மாவட்டம்.

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்வி இலாகாவிலும் பகிரங்கவேலை இலாகாவினுலும் கீழே குறிக்கப்பட்டுள்ள தொகைக்கு பதிவு செய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். மேலே குறிக்கப்பட்ட வேலைக்கு கல்வி இலாகாவில் 7,500 ரூபாவிற்கும் அதற்குமேற்பட்ட தொகைக்கும் அல்லது பகிரங்க வேலை இலாகாவில் 15,000 ரூபாவிற்கும் அதற்குமேற்பட்ட தொகைக்கும் பதிவுசெய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வேலைக்கு விண்ணப்பிக்க விரும்பும் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், முறையே, கூட்டுறவு ஆக்கத்துறை ஆணையாளரிடமோ, கிராமமுன்னேற்ற அதிபரிடமோ, தொழிற் கொமிசனரிடமோ தங்கள் சங்கங்கள் 15,000 ரூபா வேலைப் பெறுமதியான கட்டிட வேலைகளைக் பாரமெடுத்து திருப்திகரமாகச் செய்யக் கூடிய வன்மைபடைத்தவர்கள் என்பதற்கிணங்க ஒரு அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்து விண்ணப்பப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு வேலைக்கும் (A.C) கிளை கல்விக்கந்தோரிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை கீழ்மாகாணக் கல்வி அதிகாரி அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 25 ந் திகதி பிற்பகல் 3.30 மணி வரையுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். செக்குகள், போஸ்ரல் ஓடர்கள், மணி ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. கேள்விப்பத்திரங்களுக்கு பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் கீழ்மாகாண கல்வி அதிகாரி அவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்களுக்கு மாத்திரமே பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் வழங்கப்படும்.

4. இவ்வேலைக்கு இரண்டாம் பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் கீழ்மாகாணக் கல்வி அதிகாரி அவர்களிடம் பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் பதிவுசெய்த தபால்மூலம் அனுப்பப் படவேண்டும்.

பதிவுசெய்த தபால்மூலம் அனுப்பவிரும்பாத உள்ளூர் விண்ணப்பகாரர்கள் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப்பத்திரங்களை வித்தியாதிகாரியின் காரியாலய உதவியாளரிடம் சேர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின்மீது வேலையின் விபரங்களும் விண்ணப்பக்காரன் பெயரும் விலாசமும் எழுதப்படவேண்டும். கீழ் மாகாணக் கல்விக் காரியாலயத்தில் இவ்வேலைக்குரிய படங்களும், மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

5. 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 26 ந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். கேள்விப் பத்திரங்களைத்திறந்து பார்வையிடும்பொழுது விண்ணப்பக்காரர் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பக் காரர்களுக்கு விண்ணப்பத்தொகைகளும் விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக்காட்டப்படும்.

6. விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரையிலுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

7. இவ்வேலைகள் செய்யப்படும்பொழுது, இலங்கையரும் குறிப்பிட்ட வேலைநடக்கும் பிரதேசத்தில் வசிப்பவருமான வேலையாட்களையே அமர்த்த வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத்தவறினல் அத்தவறு ஒப்பந்தச் சரத்துக்களை மீறியதாகக்கருதப் பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படக்கூடும். எனினும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர், கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்மதத்துடன் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலைநடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கைவாசியான வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனுமதி அளிப்பர். இந்த அனுமதியில்லாமல் இலங்கையர் அல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தவிர்க்கப் பட்டுள்ளது.

8. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் ஓடுகள் பாவிக்கவேண்டிய கட்டிடங்கட்கு உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட நல்ல ரக ஓடுகளையே பாவிக்கவேண்டும். கட்டிடமேற்பார்வையாளர்கள் உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட ஓடுகள் நல்ல ரகத்தில் பெறமுடியாதென அத்தாட்சிப் படுத்தினலன்றி, வேறு எவ்வித ஓடுகளும் பாவிக்க அனுமதியளிக்கப் படமாட்டாது. ஓடுகளின் தராதரத்தை நிட்சயப்படுத்த வேண்டிய சோதனைகள் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராச்சிக்கூடத்தில் விண்ணப்பக்காரர்களின் செலவில் நடத்தவேண்டும். இது மாத்திரமன்றி தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் தாங்கள் உபயோகிக்க இருக்கும் ஓடுகள் சிலவற்றையும் அவ்வோடுகள் சகல பிரமாணங்களுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்டிருக்கிற தென்பதற்கு அத்தாட்சியாக இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கூடத்தின் அத்தாட்சிப்பத்திரம் ஒன்றையும் சமர்ப்பித்து மேற்பார்வையாளர்களின் அங்கீகாரம் பெறவேண்டும்.

சி. தணிகாசலம்,
வித்தியாதிகாரி, மட்டக்களப்பு.

கல்விக்காரியாலயம்,
மட்டக்களப்பு,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 28 ந உ.

---

## அறிவித்தல்

**கெயர் மா 50 இருத்தல் மூடைகளை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் திருகோணமலை விநியோக நிலையத்தில் இருந்து திருகோணமலைப்பகுதி பாண்காரர்களுக்கு ஏற்றிக்கொண்டுபோய் கொடுத்தற்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரம், 1960/61**

1. மேற்குறித்த சேவைக்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களை மட்டக் களப்பு வித்தியா கந்தோர் கேள்விச்சபைத்தலைவர் 26.8.1960 திகதி அன்று முற்பகல் 9.30 மணிவரை ஏற்றுக்கொள்வார். இவை இரட்டைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு காகித உறையில் வைத்து, மெழுகுவார்த்து முத்திரை இட்டு அனுப்பப்படல்வேண்டும்.

2. இவ்வேலைக்கான கேள்விப்பத்திரம் 25.8.1960 அன்று பி. ப. 3.30 மணி வரையும் வழங்கப்படும். இவ்வேலைக்கு (ஏ.சி.) கிளைக் கல்விக் கந்தோரிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை கீழ்மாகாணக் கல்வி யதிகாரி அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். செக்குகள், போஸ்டல் ஓடர்கள், மணி ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. கேள்விப்பத்திரங்களுக்கு பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் கீழ்மாகாண கல்வியதிகாரி அவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. இவ்வேலைக்கு 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் கீழ் மாகாண கல்வியதிகாரி அவர்களிடம் பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் பதிவு செய்த தபால்மூலம் அனுப்பப்படவேண்டும். பதிவு செய்த தபால்மூலம் அனுப்ப விரும்பாத உள்ளூர் விண்ணப்பக் காரர்கள் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதி மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப்பத்திரங்களை கல்வியதிகாரியின் கந்தோரில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் தபாற்பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும். இதற்கான முழு விபரங்களும் கீழ்மகாணக் கல்வியதிகாரியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

5. தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கெயர் மா மூடைகளை கல்வியதிகாரியிடம் இருந்து கட்டளை கிடைத்த மூன்று நாட்களுக்குள் பாண் போறணைக்காரர்களுக்கு விநியோகஞ் செய்யவேண்டும்.

6. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களில் யாதேனும் திருத்தங்கள் செய்யப்படின் அல்ல்து அழிக்கப்பட்டு புதிதாக யாதேனும் இடப்படின் அவற்றிற்குப் பக்கத்தில் ஒப்பந்தக்காரன் தனது முதலெழுத்து ஒப்பத்தை இடவேண்டும்.

7. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் தனது ஒப்பந்தத்தை செவ்வனே நடாத்தி முடிக்க ரூபா 500 பிணைப்பணமாக கச்சேரியில் கட்ட சித்தமாக இருக்க வேண்டும்.

8. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் ஏற்படுத்துவதற்கான கடைசித் திகதியில் இருந்து மூன்று மாத காலம் வரை எத்தருணத்திலேனும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் ஏற்கப்படுவதற்கு விண்ணப்பக்காரர் இணங்க வேண்டும்.

9. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் ஏற்காது விடுதற்கும் குறித்த ஒரு ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை ஒரு பகுதி அளவில் ஏற்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

10. வித்தியாதிகாரியுடன் செய்து கொள்ளப்படவேண்டிய ஒப்பந்தத்தில் ஒட்டும் முத்திரைகளை தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர்களே கொடுக்க வேண்டும்.

11. ஏற்கப்படும் ஒரு ஒப்பந்தத்தை கேள்விச்சபையின் அனுமதியின்றி ஒப்பந்தக்காரன் இன்னொரு பெயரில் மாற்றவேனும், அல்லது அதிற்குறிப்பிட்ட வேலையை இன்னொருவரால் செய்விக்கவேனும் முடியாது. ஒரு ஒப்பந்தக்காரன் தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும் இன்னொருவருக்கு அளிக்கும் தத்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. அரசாங்கத்துடன் முன்னர் எத்தருணத்திலேனும் ஒப்பந்தம் செய்யாதோர் இதற்கு மனுச்செய்யுமிடத்து, தமது முழுப்பெயர் தற்போதைய விலாசம் எப் பகுதியில் அவருக்கு ஆதனம் இருக்கின்ற தென்றும், அவற்றின் தன்மை, பரப்பு ஆகிய விபரங்களைக்கொண்ட ஓர் அறிக்கையை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

13. அரசாங்க ஒப்பந்தங்களை இதற்குமுன் நிறைவேற்றியவர்கள் தாம் நிறைவேற்றிய ஒப்பந்தங்கள் எந்த எந்த இலாக்காவில் எப்பகுதியில் நிறைவேற்றப்பட்டதெனக் குறிப்பிடவேண்டும்.

14. அரசாங்கத்திற்காக அரசாங்கத்தின் சார்பில் கடமையாற்றும் கல்வி அதிகாரியுடன் ஒப்பந்தக்காரன் ஒப்பந்தம் செய்ய வேண்டும். இப்பதவிப்பெயர் இப்பொழுது அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தரையும் அவர் பின் அக்கடமை வகிப்போரையும் கருதும்.

15. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரன் தான் வித்தியாதிகாரிக்கு சமர்ப்பிக்கும் வவுச்சர்கள், பிறசாதனங்கள் ஆகியவற்றில் கொடுக்கும் விபரங்கள் சரியாகக் கொடுப்பதற்குப் பொறுப்பாகக் கருதப்படுவர்.

16. கேள்விப்பத்திரங்கள் கொண்ட உறைகளில் கெயர் மா விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம் என இடது பக்கத்து தபால் உறையில் எழுதப்படல் வேண்டும்.

17. இவ்வேலை செய்யப்படும்பொழுது இலங்கையரும், குறிப்பிட்ட வேலை நடக்கும் பிரதேசத்தில் வசிப்பவருமான வேலையாட்களையே வேலைக்கு அமர்த்த வேண்டும் என்பது ஒப்பந்தத்தில் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத்தவறினால் அத்தவறு ஒப்பந்தச் சரத்துகளை மீறியதாகக் கணிக்கப்பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவும் கூடும். எனினும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர் கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையர் அல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனுமதி அளிப்பர். இந்த அனுமதியில்லாமல் இலங்கையர் அல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

18. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் கல்வியதிகாரியின் கந்தோரில் 26.8.1960 அன்று மு.ப 9.30 மணிக்குத் திறக்கப்படும்.

19. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் விண்ணப்பக்காரர் பிரசன்னமாய் இருக்கலாம். பிரசன்னமாய் இருக்கும் விண்ணப்பக்காரர்கள் முன்னிலையில் விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் விகிதங்களும் வாசிக்கப்படும். ஒப்பந்தக்கேள்விப்பத்திரத்தைப் பரிசீலனை செய்யவிரும்பும் எந்த விண்ணப்பக்காரர்களும் கேள்விச் சபைத் தலைவருடன் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டவருடன் ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்களின் பிரதியை பரிசீலனை செய்ய அனுமதிக்கப்படும்.

சி. தணிகாசலம்,
கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரி.

கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந் உ.

---

## அறிவித்தல்

**கெயர் மா 50 இருத்தல் மூடைகளை பிரதி உணவு கட்டுப்பாட்டு அதிகாரியின் மட்டக்களப்பு விநியோக நிலையத்தில் இருந்து, மட்டக்களப்புப் பகுதி பாண்காரர்கட்கு, ஏற்றிக்கொண்டுபோய் கொடுத்தற்கான ஒப்பந்தக் கேள்திப்பத்திரம், 1960—61**

1. மேற்குறித்த சேவைக்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களை மட்டக்களப்பு வித்தியா கந்தோர் கேள்விச் சபைத்தலைவர் 26.8.1960 ம் திகதி அன்று முற்பகல் 9.30 மணி வரை ஏற்றுக்கொள்வார். இவை இரட்டைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு காகித உறையில் வைத்து மெழுகு வார்த்து முத்திரையிட்டு அனுப்பப்படவேண்டும்.

2. இவ்வேலைக்கான கேள்விப்பத்திரம் 25.8.1960 அன்று பி. ப. 3.30 மணி வரையும் வழங்கப்படும். இவ் வேலைக்கு (ஏ.சி) கிளைக் கல்விக் கந்தோரிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக்கச்சேரியிலோ ரூபாய் 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை கீழ்மாகாணக் கல்வியதிகாரி அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். செக்குகள், போஸ்டல் ஓடர்கள், மணி ஓடர்கள், முதலியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. கேள்விப் பத்திரங்களுக்கு பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் கீழ்மாகாணக் கல்வியதிகாரி அவர்களிடம் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. இவ்வேலைக்கு 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் கீழ் மாகாண கல்வியதிகாரி அவர்களிடம் பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் பதிவு செய்த தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும். பதிவு செய்த தபால்மூலம் அனுப்ப விரும்பாத உள்ளூர் விண்ணப்பக்காரர்கள் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதிமூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப் பத்திரங்களை கல்வியதிகாரியின் கந்தோரில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் தபாற் பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும். இதற்கான முழு விபரங்களும் கீழ்மாகாணக் கல்வியதிகாரியின் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கெயர் மா மூடைகளை கல்வியதிகாரியிடமிருந்து கட்டளைகிடைத்த மூன்று நாட்களுக்குள் பாண் போறணைக்காரர்களுக்கு விநியோகஞ் செய்யவேண்டும்.

6. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களில் யாதேனும் திருத்தங்கள் செய்யப்படின் அல்லது அழிக்கப்பட்டு புதிதாக யாதேனும் இடப்படின் அவற்றிற்குப் பக்கத்தில் ஒப்பந்தக்காரன் தனது முதலெழுத்து ஒப்பத்தை இடவேண்டும்.

7. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் தனது ஒப்பந்தத்தை செவ்வனே நடாத்தி முடிக்க ரூபா 500 பிணைப்பணமாக கச்சேரியில் கட்டச் சித்தமாய் இருக்க வேண்டும்.

8. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் ஏற்படுவதற்கான கடைசித் திகதியிலிருந்து மூன்று மாத காலம் வரை எத்தருணத்திலேனும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் ஏற்கப்படுவதற்கு விண்ணப்பக்காரர் இணங்க வேண்டும்.

9. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையும் ஏற்காது விடுதற்கும் குறித்த ஒரு ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை ஒரு பகுதியளவில் ஏற்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

10. வித்தியாதிகாரியுடன் செய்துகொள்ளப்படவேண்டிய ஒப்பந்தத்தில் ஒட்டும் முத்திரைகளை தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர்களே கொடுக்க வேண்டும்.

11. ஏற்கப்படும் ஒரு ஒப்பந்தத்தை கேள்விச்சபையின் அனுமதியின்றி ஒப்பந்தக்காரன் இன்னொருவர் பெயரில் மாற்றவேனும், அல்லது அதிற்குறிப்பிட்ட வேலையை இன்னொருவரால் செய்விக்கவேனும் முடியாது. ஒரு ஒப்பந்தக்காரன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும் இன்னொருவருக்கு அளிக்கும் தத்துவத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. அரசாங்கத்துடன் முன்னர் எத்தருணத்திலேனும் ஒப்பந்தம் செய்யாதவர்கள் இதற்கு மனுச்செய்யுமிடத்து தமது முழுப்பெயர், தற்போதைய விலாசம், எந்தப் பகுதியில் அவருக்கு ஆதனம் இருக்கிறதென்றும், அவற்றின் தன்மை, பரப்பு, ஆகிய விபரங்களைக் கொண்ட ஓர் அறிக்கையை எழுத்துமூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

13. அரசாங்க ஒப்பந்தங்களை இதற்குமுன் நிறைவேற்றியவர்கள் தாம் நிறைவேற்றிய ஒப்பந்தங்கள் எந்த இலாக்காவில் எப்பகுதியில் நிறைவேற்றப்பட்டதெனக் குறிப்பிடவேண்டும்.

14. அரசாங்கத்திற்காக அரசாங்கத்தின் சார்பில் கடமையாற்றும் கல்வியதிகாரியுடன் ஒப்பந்தக்காரன் ஒப்பந்தம் செய்ய வேண்டும். இப்பதவிப்பெயர் இப்பொழுது அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தரையும் அவர்பின் அக்கடமை வகிப்போரையும் கருதும்.

15. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரன் தான் வித்தியாதிகாரிக்கு சமர்ப்பிக்கும் வவுச்சர்கள், பிறசாதனங்கள், ஆகியவற்றில் கொடுக்கும் விபரங்கள் சரியாகக் கொடுப்பதற்குப் பொறுப்பாகக் கருதப்படுவர்.

16. கேள்விப் பத்திரங்கள் கொண்ட உறைகளில் கெயர் மா விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம் என இடது பக்கத் தபால் உறையில் எழுதப்படல் வேண்டும்.

17. இவ்வேலை செய்யப்படும்போது இலங்கையரும், குறிப்பிட்ட வேலை நடக்கும் பிரதேசத்தில் வசிப்பவருமான வேலையாட்களையே அமர்த்த வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத்தவறினால் அத்தவறு ஒப்பந்தச் சரத்துகளை மீறியதாகக் கணிக்கப்பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவும் கூடும். எனினும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர் கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் சம்மதத்துடன் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையர் அல்லாத வேலையாட்களையோ, அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனுமதியளிப்பர். இந்த அனுமதியில்லாமல் இலங்கையர் அல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

18. ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் கல்வியதிகாரியின் கந்தோரில் 26.8.1960 அன்று மு.ப 9.30 மணிக்குத் திறக்கப்படும்.

19. ஒப்பந்தக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் விண்ணப்பக்காரர் பிரசன்னமாய் இருக்கலாம். பிரசன்னமாய் இருக்கும் விண்ணப்பக்காரர்கள் முன்னிலையில் விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் விகிதங்களும் வாசிக்கப்படும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தை பரிசீலனை செய்யவிரும்பும் எந்த விண்ணப்பக்காரர்களும் கேள்விச் சபைத் தலைவருடன் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டவருடன் ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களின் பிரதியைப் பரிசீலனை செய்ய அனுமதிக்கப்படும்.

சி. தணிகாசலம்,
கிழக்கு மாகாண கல்வியதிகாரி.

கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந் வ.

---

## உணவு அதிகாரியின் பகுதி

**வியாங்கொடை உணவுக்கட்டுப்பாட்டுப் பண்டசாலைகளிலுள்ள புல், செடி முதலியவற்றை மாதாந்தம் வெட்டி, சுத்தப்படுத்தி, அப்புறப்படுத்துதற்கான கோரிக்கைகள், 1960/61**

வியாங்கொடை உணவுக்கட்டுப்பாட்டுப் பண்டசாலைகளிலுள்ள புல், செடி முதலியவற்றை மாதாந்தம் வெட்டி, சுத்தப்படுத்தி, அப்புறப்படுத்துதற்கான கோரிக்கைகள் 1960 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரைக்கும் உணவு அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும். வேலைக்குத் தேவைப்படும் தொழிலாளரையும், ஆயுதங்களையும் கோரிக்கைக்காரரே ஒழுங்கு செய்ய வேண்டும்.

2. உணவு அதிகாரியின் காரியாலயம், 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்னும் விலாசத்திலிருந்து 1960 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ந் திகதி நண்பகல் 12 மணிவரைக்கும் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் கோரிக்கைகள் (இரு பிரதிகளில்) செய்யப்படவேண்டும். குறிப்பிட்ட பத்திரத்தில் செய்யப்படாத கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கோரிக்கைப்பத்திரம் வழங்குமுன், உணவு அதிகாரியிடம் ரூ. 25 தங்குபணமாகக் கொடுத்துப்பெற்ற பற்றுச்சீட்டுக் காண்பிக்கப்படவேண்டும்.

3. இக்கோரிக்கை சம்பந்தப்பட்ட முழு விபரங்களுமடங்கிய ஓர் பத்திரத்தை உணவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்,
உணவு அதிகாரிக்காக.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 28 ந் வ.

---

**பதுளை மாவட்ட அரசாங்க அதிபருக்கு தேங்காய் மட்டை வழங்க கேள்விப்பத்திர அறிவித்தல்**

1960 ம் ஆண்டு ஆவணி மாசம் 17 ம் திகதி பிற்பகல் 4.30 மணி முன்பதாக பதுளை மாவட்ட அரசாங்க அதிபரால் தேங்காய் மட்டை வழங்க கேள்விப்பத்திரங்கள் அனுமதிக்கப்படும்.

1960 ம் ஆண்டு ஆவணி மாசம் தொடக்கம் ஆனி மாசம் மட்டும் 50,000 தேங்காய் மட்டைகளை விநியோகிக்க முடியுமென்றுல்தான் கேள்விப்பத்திரம் கொடுக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் பதுளை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ரூ. 50 கட்டுப்பணம் திறைசேரியிலோ, கச்சேரியிலோ கட்டி அதன் ரசீதைக் காட்டி, ஆவணி மாசம் 15 ம் திகதி பிற்பகல் 3 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் வேண்டிய தகவல்களுக்கு பதுளை மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

பி. பி. வி. எ. ஜே. பி. சேனுறட்ன,
பதுளை அரசாங்க அதிபர்.

கச்சேரி, பதுளை,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 26 ந் வ.

---

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

**பிறதேசக் குடிவகைத் தவறணைக் குத்தகைகள் விற்பனவு, 1960–61, கொழும்பு டிஸ்திறிக்**

(i) 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 8 ம் திகதி வெளியான 12,156 ம் இலக்க அரசாங்க "கசெற்" பத்திரிகையிற் காணப்படும் பிறதேச குடிவகைத் தவறணைக் குத்தகை விற்பனவு நிபந்தனைகளுக்கும்,

(ii) 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 14 ந் திகதி வெளியான 12,107 ம் இலக்க அரசாங்க "கசெற்" பத்திரிகையிற் பிரசுரித்த 489 ம் இலக்க மதுபானத் தீர்வை அறிவித்தலிற் காணப்படும், மதுபானத் தீர்வை லைசென்ஸ் பத்திரங்கள் அனைத்திற்கும் ஏற்புடையனவாய பொது நிபந்தனைகளுக்கும் அமைய, இதன்கீழ்க் குறித்த உரிய ஸ்தல இடப்பரப்புக்களுள், அரசாங்கம் அங்கீகரிக்கும் பொருத்தமான காணிகளில், 1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ம் திகதி முடியவுள்ள காலத்தில், (உள்நாட்டில் உற்பத்தி செய்த மோல்ற் குடிவகை உட்படப் பிறதேசக் குடிவகை, தவறணை லைசென்ஸ் பத்திரப்படி, விற்கும் பிரத்தியேக உரித்தை வாங்குவதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் இத்தால் வரவழைக்கப்படுகின்றன.

2. கொழும்புக் கச்சேரியிற் பெறப்பாலனவாய மாதிரிப் பத்திரங்களில் ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப்பத்திரமும் தயாரிக்கப்பட்டு, (எ) ம் நிரையில் ஒவ்வொரு தவறணைக்கும் எதிரே குறிக்கப்பட்ட தொகைப்பணத்தைக் கட்டியதற்கு அறிகுறியாய திறைசேரி அல்லது கச்சேரிப் பற்றுச் சீட்டையும் கொண்டிருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப் பத்திரமும் மெழுகிட்டு முத்திரை பொறித்த காகித உறையில் வைக்கப்பட்டு, உறையின் இடதுகை மேல் மூலையில், "........................ ம் இலக்க பிறதேசக் குடிவகைத் தவறணைக்கு ஒப்பந்தக் கேள்விப்பத்திரம், கொழும்பு டிஸ்திறிக், 1960–61" என்று தெளிவாக எழுதப்பட்டு, 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ம் திகதியன்று, ஒவ்வொரு தவறணைக்கும் எதிரே குறிக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதற்கு முன்னர், கொழும்பு மாவட்ட அதிபரை அடையத்தக்கதாக அனுப்பப்படவேண்டும்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பெறுதற்குக் குறிப்பிட்ட இறுதி நேரத்தில், ஒப்பந்தக் கேள்விக்காரர் கச்சேரியிற் சமுகமாயிருக்கவேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தை அனுப்பியவர், உரித்தை வாங்கியவர் என்று கூறப்பட்டவுடன், அவ்வுரித்தின் பேரால் பாதுகாப்பு வைப்புப் பணமாக இரண்டு மாதக் குத்தகைப் பணத்துக்குச் சமமான தொகையை மாவட்ட அதிபருக்குக் கட்டுவதோடு, விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதற்காகக் கையொப்பமிடுவர்.

5. உரித்தை வாங்கியவர் என்று யாரேனும் ஓர் ஒப்பந்தக் கேள்விக்காரர் கூறப்பட்டபின், விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமிடுமாறும் பாதுகாப்பு வைப்புப் பணத்தைக் கட்டுமாறும் அவர் கேட்கப்படுமிடத்து, அவர் அவ்வாறு செய்யத்தவரின், அவருடைய ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் பறிமுதல் செய்யப்படும்; மேலும், மதுபான லைசென்ஸ் பத்திரங்கள் சகலவற்றின் தொடர்பிலும், அவருடைய பெயர் தவறுவோர் பெயர்கள் நிரலில் இடுபடுதற்கும் அவர் பாத்திரராவர். இச்சந்தர்ப்பம் தவிர, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை அனுப்பியவர் தாம் விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமிட்டுக் குறித்த பாதுகாப்பு வைப்புப் பணத்தைக் கட்டியவுடன், ஏனைய ஒப்பந்தக் கேள்விக்காரருடைய ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப்பணங்கள் அவர்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்படும்.

6. யாதேனும் ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தை அல்லது சகல ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களையும் எவ்வித காரணமும் காட்டாது ஏற்க மறுக்கும் உரித்து மாவட்ட அதிபருக்கு உண்டு.

7. பிறதேசக் குடிவகைத் தவறணைகளின் அங்கீகரிக்கப்பட்ட நிரல் கீழேயுள்ளவாறு :—

**கொழும்பு மாநகரசபை**

| (அ) தொடர் இல. | (ஆ) பிரிவு | (இ) ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்புள் தவறணை அமைக்கப்படவேண்டும்) | (ஈ) தவறணையைத் திறக்கும் நேரம் | (உ) தவறணையை மூடும் நேரம் | (ஊ) ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் | (எ) ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பெறும் இறுதி நேரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா | |
| 1. | 2 ம் பிரிவு, முகத்துவாரம் .. | பின்வரும் எல்லைகளுள் அடங்கிய இடப்பரப்பு :— வடக்கு எல்லை : மோதற வீதிச்சந்திதொடக்கம் அளுத்மாவத்தை வீதிச் சந்திவரையுள்ள மாதம்பிட்டி வீதியின்தெற்குப் பக்கம் ; கிழக்கு எல்லை : மாதம்பிட்டி வீதிச் சந்தி தொடக்கம் கீழ் சென் அன்றூஸ் பிளேஸ் சந்தி வரையுள்ள அளுத்மாவத்தை வீதியின் மேற்குப் பக்கம் ; தெற்கு எல்லை : அளுத்மாவத்தை வீதிச் சந்தி தொடக்கம் சென். அன்றூஸ் வீதிச் சந்தி வரையுள்ள கீழ் சென் அன்றூஸ் பிளேசின் வடக்குப் பக்கம் ; மேற்கு எல்லை : கீழ் சென் அன்றூஸ் பிளேஸ் சந்தி தொடக்கம் மாஷல் வீதிச் சந்தி வரையுள்ள சென் அன்றூஸ் வீதியின் கிழக்குப் பக்கமும், மாஷல் வீதிச் சந்தி தொடக்கம் மாதம்பிட்டி வீதிச் சந்தி வரையுள்ள முகத்துவார வீதியின் கிழக்குப் பக்கமும் | மு.ப. 8 மணி .. | பி.ப. 7 மணி .. | 500 | .. மு.ப. 10 மணி |
| 2. | 3 ம் பிரிவு, மாதம்பிட்டி .. | ஸ்ரேஸ் வீதிச் சந்தி தொடக்கம் பிறின்ஸ் ஓவ் வேல்ஸ் அவென்யு சந்தி வரையுள்ள சென். யோசெஸ்வ் வீதியின் இருபக்கங்களும் | மு.ப. 8 மணி .. | பி.ப. 7 மணி .. | 750 | .. மு.ப. 10.15 மணி |
| 3. | 13 ம் பிரிவு, கோட்டை .. | (அ) யோக் வீதி சந்தி தொடக்கம் குவீன் வீதிச் சந்தி வரையுள்ள பெயிலி வீதியின் இரு பக்கங்களும்<br>(ஆ) சேர்ச் வீதிச் சந்தி தொடக்கம் கனல்ரோ சந்தி வரையுள்ள யோக் வீதியின் இரு பக்கங்களும்<br>(இ) விளாக்ஸ்ராவ் வீதிச் சந்தி தொடக்கம் யோக் வீதிச் சந்திவரையுள்ள சதாம் வீதியின் இரு பக்கங்களும்<br>(ஈ) சதாம் வீதிச் சந்தி தொடக்கம் சேச் வீதிச் சந்தி வரையுள்ள குவீன் வீதியின் கிழக்குப் பக்கம் | மு.ப. 8 மணி .. | பி.ப. 7 மணி .. | 750 | .. மு.ப. 10.30 மணி |
| | | **கொழும்பு மாநகரசபைக்கு வெளியேயுள்ள கொழும்பு டிஸ்திறிக்** | | | | |
| 4. | மொறட்டுவ நகர சபை, 9 ம் பிரிவு | மொறட்டுவ நகரசபையின் 9 ம் பிரிவிலுள்ள மொறட்டுவெல்ல கிராமத்தினுள்ளடங்கிய காலி வீதியின் மேற்குப் பக்கம் | மு.ப. 8 மணி .. | பி.ப. 8 மணி .. | 1000 | .. மு.ப. 10.45 மணி |
| 5. | வத்தளை-மாபோலை பாலியகொடை நகரசபை, 6 ம் பிரிவு | வத்தளை-மாபோலை-பாலியகொடை நகரசபையின் 6 ம் பிரிவாகிய பாலியகொடை வடக்கிலுள்ள பாலியகொடை கிராமத்தினுள் | மு.ப. 8 மணி .. | பி.ப. 7 மணி .. | 500 | .. மு.ப. 11 மணி |
| 6. | நீர்கொழும்பு மாநகரசபை, 8 ம் பிரிவு | நீர்கொழும்பு மாநகர சபையின் 8 ம் பிரிவாகிய குடன்விலையினுள் | மு. ப. 9 மணி .. | பி.ப. 8 மணி .. | 500 | .. மு.ப. 11.15 மணி |

8. மேலதிக விபரங்களைக்கொழும்புக் கச்சேரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்புக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 26 ந வ.

ஜி. பி. தம்பையா,
மாவட்ட அதிபர், கொழும்பு டிஸ்திறிக்.

---

## சாராயக் குத்தகை விற்பனவு—கொழும்பு டிஸ்திறிக், 1960–61

(i) 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 18 ந் திகதி வெளியாய 12,159 ம் இலக்க அரசாங்க பிரத்தியேக " கசெற் " பத்திரிகையிற் காணப்படும் சாராயக் குத்தகை விற்பனை நிபந்தனைகளுக்கும்,

(ii) 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 14 ந் திகதி வெளியாய 12,107 ம் இலக்க அரசாங்க பிரத்தியேக " கசெற் " பத்திரிகையில் பிரசுரித்த 489 ம் இலக்க மதுபானத் தீர்வை அறிவித்தலிற் காணப்படும், மதுபானத் தீர்வை லைசென்ஸ் பத்திரங்கள் அனைத்திற்கும் ஏற்புடையனவாய பொது நிபந்தனைகளுக்கும் அமைய, இதன்கீழ்க் குறித்த, இடத்திற்கேற்ப, சாராயத் தவறணைகளிலும் சாராயத் தவறணைத் தொகுதிகளிலும், 1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி முடியவுள்ள காலத்தில், சில்லறைக்குச் சாராயத்தை விற்கும் பிரத்தியேக உரித்தை வாங்குவதற்கு ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் இத்தால் வரவழைக்கப்படுகின்றன.

2. கீழே கொடுபடும் காரியாலயங்களிற் பெறற்பாலனவாய மாதிரிப்பத்திரங்களில் ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப்பத்திரமும் தயாரிக்கப்பட்டு (ஏ) ம் நிரையில் குறிக்கப்பட்ட தொகைப் பணத்தைக் கட்டினதற்கு அறிகுறியாக கச்சேரிப் பற்றுச்சீட்டையும் கொண்டிருக்கவேண்டும் :—

(அ) யாதேனும் கச்சேரி,
(ஆ) மதுபானத் தீர்வைக் கொமிஷனர் காரியாலயம், மக்கலம் வீதி, கொழும்பு,
(இ) வட்டார மதுபானத் தீர்வைக் காரியாலயம், கொழும்பு,
(ஈ) வட்டார மதுபானத் தீர்வைக் காரியாலயம், களுத்துறை,
(உ) வட்டார மதுபானத் தீர்வைக் காரியாலயம், சிலாபம்.

3. ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப்பத்திரமும் மெழுகிட்டு முத்திரை பொறித்த காகித உறையில் வைக்கப்பட்டு, உறையின் இடதுகை மேல் மூலையில் " ........ ம் இலக்கச் சாராயத் தவறணைக்கு/........ ம் இலக்கத் தொகுதிக்கு ஒப்பந்தக் கேள்விப்பத்திரம், ........ டிஸ்திறிக், 1960-61 " என்று தெளிவாக எழுதப்பட்டு 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ந் திகதியன்று ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைப் பெறுதற்குக் கீழே குறிக்கப்பட்ட இறுதி நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் கொழும்பு மாவட்ட அதிபரை அடையத்தக்கதாக அனுப்பப்படவேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை அனுப்பியவர் உரித்தை வாங்கியவர் என்று கூறப்பட்டவுடன் சாராயக் குத்தகை விற்பனவு நிபந்தனைகளின் 9 (i) (A) ம் நிபந்தனையிற் குறிப்பிட்ட தொகையை அவ்வுரித்தின் பேரால் பாதுகாப்பு வைப்புப் பணமாக மாவட்ட அதிபருக்குக் கட்டுவதோடு விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமுமிடுவர்.

5. உரித்தை வாங்கியவர் என்று யாரேனும் ஓர் ஒப்பந்தக் கேள்விக்காரர் கூறப்பட்டபின், விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமிடுமாறும் பாதுகாப்பு வைப்புப் பணத்தைக் கட்டுமாறும் அவர் கேட்கப்படுமிடத்து, அவர் அவ்வாறு செய்யத்தவறின், அவருடைய ஒப்பந்தக் கேள்விக்கட்டுப் பணம் பறிமுதல் செய்யப்படும் ; மேலும், மதுபான லைசென்ஸ் பத்திரங்கள் சகலவற்றின் தொடர்பிலும், அவருடைய பெயர் தவறுவோர் பெயர்கள் நிரலில் இடுபடுதற்கும் அவர் பாத்திரராவர். இச்சந்தர்ப்பம் தவிர, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தை அனுப்பியவர் தாம் விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமிட்டுக் குறித்த பாதுகாப்பு வைப்புப் பணத்தைக் கட்டியவுடன், ஏனைய ஒப்பந்தக் கேள்விக்காரருடைய ஒப்பந்தக் கேள்விப்பத்திரக் கட்டுப்பணங்கள் அவர்களுக்குத் திரும்பிக்கொடுக்கப்படும்.

6. யாதேனும் ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தை அல்லது சகல ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களையும் எவ்வித காரணமும் காட்டாது ஏற்க மறுக்கும் உரித்து மாவட்ட அதிபருக்கு உண்டு.

7. இலங்கை அரசாங்கத்தின் (வட்டி ஈயும் யுத்தக் கடன்கள் உட்படவுள்ள) வட்டி ஈயும் கடன் எதன்பேரிலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக் கடன் பத்திரங்களை, தவறணைக் குத்தகை பெற்ற எவரும், பாதுகாப்பு வைப்புப் பணமாகக் கொடுக்கலாம். வங்கிகளில் இட்டுவைக்கும் பணங்களுக்குக் கொடுபடும் வட்டியைக் காட்டிலும் கூடிய வட்டியை இக்கடன்கள் ஈகின்றன. அரசாங்கம் ஒவ்வொரு அரை வருட முடிவிலும் வட்டியைக் கடன் கொடுத்தவருக்குக் கொடுக்கிறது. எக்குத்தகை பேரிலும் கொடுத்த கடன் பத்திரங்களை அக்குத்தகை முடிந்தபின்னர், வேறு குத்தகைகள் பேரில் பாதுகாப்பு வைப்புப் பணமாகக் கொடுக்கலாம். வேறு குத்தகைகள் இல்லாதவிடத்து, எவ்வித நஷ்டமுமின்றி வெளியில் இவற்றின் பெறுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். வங்கிகள் மேலதிகக் கடன்களைக் கொடுத்தற்கு இப்பத்திரங்களைப் பொறுப்பாக ஏற்கின்றன.

8. மேலதிக விவரங்களைக் கொழும்புக் கச்சேரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்புக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 26 ந் வ.

ஜி. பி. தம்பையா,
மாவட்ட அதிபர், கொழும்பு டிஸ்திறிக்.

### கொழும்பு டிஸ்திறிக்

### மேலே குறிப்பிட்ட சாராயத் தவறணைகளின் அங்கீகரிக்கப்பட்ட நிரல் (குத்தகை இடப்பரப்பு—கொழும்பு மாநகரசபை)

| (அ) தொடர் இல. | (ஆ) பிரிவு | (இ) ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்புள் தவறணை அமைக்கப்பட வேண்டும்) | (ஈ) தொகுதி இல. | (உ) ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பெறும் இறுதி நேரம் | (ஊ) தவறணையைத் திறக்கும் நேரம் | (எ) தவறணையை மூடும் நேரம் | (ஏ) ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 ம் பிரிவு, கொட்டாஞ்சேனை மேற்கு | பின்வரும் எல்லைகளுள் அடங்கிய இடப்பரப்பு :— வடக்கு எல்லை : அளுத்மாவத்தை வீதிச் சந்தி தொடக்கம் கொட்டாஞ்சேனை வீதிச் சந்திவரையுள்ள கொலீஜ் வீதியின் தெற்குப்பக்கம்; கிழக்கு எல்லை : கொலீஜ் வீதிச் சந்தி தொடக்கம் வடக்கு ஸ்கின்னேஸ் வீதிச் சந்திவரையுள்ள கொட்டாஞ்சேனை வீதியின் மேற்குப் பக்கம் ; தெற்கு எல்லை : கொட்டாஞ்சேனை வீதிச் சந்தி தொடக்கம் கோட்டபோம் வீதிச் சந்தி வரையுள்ள வடக்கு ஸ்கின்னேஸ் வீதியின் வடக்குப் பக்கம் : மேற்கு எல்லை : வடக்கு ஸ்கின்னேஸ் வீதிச் சந்தி தொடக்கம் அளுத்மாவத்தை வீதிச் சந்திவரையுள்ள கோட்டபோம் வீதிச்சந்தி தொடக்கம் கொலீஜ் வீதிச் சந்தி வரையுள்ள அளுத்மாவத்தை வீதியின் கிழக்குப் பக்கமும் | | | | | |
| 2 | ஷை .. | பின்வரும் எல்லைகளுள் அடங்கிய இடப்பரப்பு :— வடக்கு எல்லை : கோட்டபோம் வீதிச் சந்தி தொடக்கம் லாஸ்கொறீன் வீதிச் சந்தி வரையுள்ள வடக்கு ஸ்கின்னேஸ் வீதியின் தெற்குப் பக்கம் ; கிழக்கு எல்லை : வடக்கு ஸ்கின்னேஸ் வீதிச் சந்தி தொடக்கம் ஜம்பெற்றுவீதிச் சந்தி வரையுள்ள லாஸ்கொறீன் வீதியின் மேற்குப் பக்கம் ; தெற்கு எல்லை : லாஸ்கோறீன் வீதிச் சந்தி தொடக்கம் கோட்டபோம் வீதிச் சந்திவரையுள்ள ஜம்பெற்று வீதியின் வடக்குப் பக்கம் ; மேற்கு எல்லை : ஜம்பெற்று வீதிச் சந்தி தொடக்கம் வடக்கு ஸ்கின்னேஸ் வீதிச் சந்திவரையுள்ள கோட்டபோம் வீதியின் கிழக்குப் பக்கம் | I | மு.ப. ..10 மணி | மு. ப. .. 8 மணி | பி. ப. .. 7 மணி | .. 4,- |
| 3 | 2 ம் பிரிவு, முகத்துவாரம் .. | பின்வரும் எல்லைகளுள் அடங்கிய இடப்பரப்பு :— வடக்கு எல்லை : கடற்கரை தொடக்கம் மோதற வீதிச் சந்திவரையுள்ள ரெம்பிள் வீதியின் தெற்குப் பக்கமும் மோதற வீதிச் சந்தி தொடக்கம் அளுத்மாவத்தை வீதிச் சந்திவரையுள்ள மாதம்பிட்டி வீதியின் தெற்குப் பக்கமும், கிழக்கு எல்லை: மாதம்பிட்டி சந்தி தொடக்கம் மாஷல் வீதிச் | | | | | |

| (அ) தொடர் இல. | (ஆ) பிரிவு | (இ) ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்புள் தவறணை அமைக்கப்பட வேண்டும்) | (ஈ) தொகுதி இல. | (உ) ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பெறும் இறுதி நேரம் | (ஊ) தவறணையைத் திறக்கும் நேரம் | (எ) தவறணையை மூடும் நேரம் | (ஏ) ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| | | சந்திவரையுள்ள அளுத்மாவத்தை வீதியின் மேற்குப் பக்கம் ; தெற்கு எல்லை : அளுத்மாவத்தை வீதிச் சந்தி தொடக்கம் கடற்கரைவரையுள்ள மாஷல் வீதியின் வடக்குப் பக்கம் ; மேற்கு எல்லை : மாஷல் வீதிக்கும் ரெம்பிள் வீதிக்கும் இடையிலுள்ள கடற்கரை | I | .. மு. ப. 10 மணி | மு. ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | 4,000 |
| 4 | 3 ம் பிரிவு, மாதம்பிட்டி | பின்வரும் எல்லைகளுள் அடங்கிய இடப்பரப்பு :— வடக்கு எல்லை : லூக்கஸ் வீதிச் சந்திதொடக்கம் நாகலகம் வீதிச் சந்திவரையுள்ள வேர்கூசன் வீதியின் தெற்குப்பக்கம் ; கிழக்கு எல்லை : வேர்கூசன் வீதிச் சந்தி தொடக்கம் மாதம்பிட்டி வீதிச் சந்தி வரையுள்ள நாகலகம் வீதியின் மேற்குப் பக்கம் ; தெற்கு எல்லை: நாகலகம் வீதிச் சந்தி தொடக்கம் லூக்கஸ் வீதிச் சந்திவரையுள்ள மாதம்பிட்டி வீதியின் வடக்குப்பக்கம் ; மேற்கு எல்லை : மாதம்பிட்டி வீதிச் சந்தி தொடக்கம் வேர்கூசன் வீதிச் சந்தி வரையுள்ள லூக்கஸ் வீதியின் கிழக்குப் பக்கம் . | II | .. மு. ப. 10.15 மணி | மு. ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | 4,000 |
| 5 | 3 ம் பிரிவு, மாதம்பிட்டி | பின்வரும் எல்லைகளுள் அடங்கிய இடப்பரப்பு :— வடக்கு எல்லை : மட்டக்குழித் தேவாலயவீதிச்சந்தி தொடக்கம் ஆறு வரையுள்ள வேர்கூசன்வீதியின் தெற்குப் பக்கம் ; கிழக்கு எல்லை : வேர்கூசன் வீதிச் சந்தி தொடக்கம் மாதம்பிட்டி வீதிச் சந்தி வரையுள்ள லூக்கஸ் வீதியின் மேற்குப் பக்கம் ; தெற்கு எல்லை : லூக்கஸ் வீதிச் சந்தி தொடக்கம் டானியேல் வீதிச் சந்திவரையுள்ள மாதம்பிட்டி வீதியின் வடக்குப் பக்கம்; மேற்கு எல்லை : மாதம்பிட்டி வீதிச் சந்தி தொடக்கம் ஹீனமுல்ல லேன் சந்திவரையுள்ள டானியேல் வீதியின் கிழக்குப் பக்கம் | II | மு. ப. 10.15 மணி | மு. ப. 8 மணி .. | பி. ப. 7 மணி .. | 4,000 |
| 6 | 27 ம் பிரிவு, பம்பலப்பிட்டி | பின்வரும் எல்லைகளுள் அடங்கிய இடப்பரப்பு :— கொள்ளுப்பிட்டி லேன் சந்தி தொடக்கம் ஸ்கூல் லேன் சந்திவரையுள்ள காலி வீதியின் கிழக்குப் பக்கம்; 14 ம் லேன் சந்தி தொடக்கம் சென் கில்டாஸ் லேன் சந்திவரையுள்ள காலி வீதியின் மேற்குப் பக்கம் | — | .. மு. ப. 10.30 மணி | மு. ப. 8 மணி | பி. ப. 7 மணி .. | 4,000 |

**(கொழும்பு மாநகரசபை தவிர்ந்த) கொழும்பு டிஸ்திறிக்**

| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | அளுத்குறு கோறளை வடக்கு (A) | உடையார் தோப்பு .. | | | | | |
| 8 | ஷை .. | குடப்படுவ .. | III | .. மு.ப. 10.45 மணி | மு.ப. 9 மணி | .. பி.ப. 8 மணி | ... 2,000 |
| 9 | ஷை .. | பெரியமுல்லை .. | | | | | |
| 10 | ஷை .. | போலவலான .. | | | மு.ப. 9 மணி | .. பி.ப. 8 மணி | |
| 11 | ஷை .. | பிற்றிப்பான .. | | | மு.ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | |
| 12 | ஷை .. | குருன .. | IV | .. மு.ப. 11 மணி .. | மு.ப. 9 மணி | .. பி.ப. 8 மணி | .. 2,000 |
| 13 | ஷை (B) .. | டாகொன்ன .. | | | மு.ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | |
| 14 | ஷை (A) .. | கட்டுநாயக்க .. | | | மு.ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | |
| 15 | ஷை .. | ஹென்முல்லை .. | | | | | |
| 16 | ஷை .. | எறகால .. | | | | | |
| 17 | ஷை .. | கந்தாவளை .. | V | .. மு.ப. 11.15 மணி | மு.ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | .. 2,000 |
| 18 | ஷை .. | டலுவெகொட்டுவ .. | | | | | |
| 19 | ஷை .. | கொச்சிக்கடை .. | | | | | |
| 20 | அளுத்குறு கோறளை வடக்கும் தெற்கும் | கெப்புன்கொடை .. | | | மு.ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | |
| 21 | அளுத்குறு கோறளை வடக்கு (A) | சீதுவ .. | | | ஷை | .. ஷை | |
| 22 | அளுத்குறு கோறளை தெற்கு .. | போப்பிட்டி .. | VI | .. மு.ப. 11.30 மணி | ஷை | .. ஷை | 3,000 |
| 23 | ஷை .. | டாண்டுகம .. | | | ஷை | .. ஷை | |
| 24 | ஷை .. | கனுவானை .. | | | மு.ப. 9 மணி | .. பி.ப. 8 மணி | |
| 25 | ஷை .. | வெலிகம்பிட்டி .. | | | ஷை | .. ஷை | |
| 26 | ஷை .. | கந்தானை .. | VII | மு.ப. 11.45 மணி | மு.ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | — 2,000 |
| 27 | ஷை .. | கெறகபொக்குன .. | | | | | |
| 28 | ஷை .. | திம்பிறிகஸ்யாய .. | VIII | உச்சி 12 .. | மு.ப. 8 மணி | .. பி.ப. 7 மணி | — 1,500 |
| 29 | ஷை .. | உஸ்வெற்றக்கெய்யாவ .. | | | | | |

## தனிப்பட விற்கப்படும் தவறணைகள்

| தொடர் இல. | பிரிவு | ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்புள் தவறணை அமைக்கப்பட வேண்டும்) | ஒப்பந்தக் கேள்விப் பத்திரங் களைப் பெறும் இறுதி நேரம் | தவறணையைத் திறக்கும் நேரம் | தவறணையை மூடும் நேரம் | ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 30 | 9 ம் பிரிவு, மொறட்டுவ நகர சபை .. | மொறட்டுவ நகர சபையின் 9 ம் பிரிவிலுள்ள, டிகொறல்லே கிராமத்தினுள் — | .. பிற்பகல் 12.15 மணி | முற்பகல் 8 மணி | பிற்பகல் 8 மணி | ரூபா 4,000 |
| 31 | சியனகோறளை மேற்கு (AP) .. | கறகஹமுனேபஹல கிராமத்தினுள், கடவத்தை–ருகம வீதியின் இருபக்கங்களிலும், கண்டி வீதியிலிருந்து திரும்புமிடத்திலிருந்து 400 யாருக்குக் குறையாத தூரத்தில் — | .. பிற்பகல் .. 12.30 மணி | முற்பகல் 8 மணி .. | பிற்பகல் 7 மணி .. | 1,500 |

(கொழும்பு மாநகரசபை இடப்பரப்புத் தவிர்ந்த) கொழும்பு டிஸ்திறிக்கிலுள்ள தவறணைகள்பற்றிய தொடர் இலக்கம், பிரிவு, ஸ்தல இடப்பரப்பு ஆகியவை கீழே கொடுபடுகின்றன. இவற்றை ஒப்பந்தக் கேள்விக்காரர் கவனிக்குமாறு கேட்கப்படுகின்றனர் :—

## சாராயத் தவறணைகள்

### (கொழும்பு மாநகரசபை தவிர்ந்த) கொழும்பு டிஸ்திறிக்

| (அ) தொடர் இல. | (ஆ) பிரிவு | (இ) ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்புள் தவறணை அமைக்கப்படவேண்டும்) |
|---|---|---|
| 7 | நீர்கொழும்பு மாநகர சபை, 8 ம் பிரிவு .. | நீர்கொழும்பு மாநகரசபையின் 8 ம் பிரிவாகிய குடன்விலேயிலுள்ள உடையார் தோப்புக் கிராமத்தினுள் |
| 8 | டி 4 ம் பிரிவு .. | நீர்கொழும்பு மாநகரசபையின் 4 ம் பிரிவாகிய கடற்கரைத் தெருவிலுள்ள குடப்படுவ கிராமத்தினுள் |
| 9 | டி 5 ம் பிரிவு .. | நீர்கொழும்பு மாநகர சபையின் 5 ம் பிரிவாகிய குடப்படுவவிலுள்ள பெரிய முல்லேக் கிராமத்தினுள் |
| 10 | டி 10 ம் பிரிவு .. | நீர்கொழும்பு மாநகர சபையின் 10 ம் பிரிவாகிய பெரிய தெருவிலுள்ள போலவலான கிராமத்தினுள் |
| 11 | அளுத்குறு கோறளை வடக்கு (A) .. | பிற்றிப்பான கிராமத்தினுள் |
| 12 | நீர்கொழும்பு மாநகரசபை, 11 ம் பிரிவு .. | நீர்கொழும்பு மாநகர சபையின் 11 ம் பிரிவாகிய குருன—போலவலானவிலுள்ள குருனக் கிராமத்தினுள் |
| 13 | அளுத்குறு கோறளை வடக்கு (B) .. | டாகொன்ன கிராமத்தினுள் |
| 14 | டி (A) .. | கட்டுநாயக்க கிராமத்தினுள் |
| 15 | டி .. .. | ஹென்முல்லேக் கிராமத்தினுள் |
| 16 | டி .. .. | எற்கால கிராமத்தினுள் |
| 17 | டி .. .. | கந்தாவளை கிராமத்தினுள் |
| 18 | டி .. .. | டலுவேகொட்டுவ கிராமத்தினுள் |
| 19 | கொச்சிக்கடைப் பட்டின சங்கம் .. | கொச்சிக்கடைப் பட்டின சங்க எல்லேகளுள் |
| 20 | அளுத்குறு கோறளை வடக்கு (A) .. | கெபுன்கொடை கிராமத்தினுள் |
| 21 | டி .. .. | சீதுவ கிராமத்தினுள் |
| 22 | டி தெற்கு .. | போப்பிட்டி கிராமத்தினுள் |
| 23 | டி .. .. | டாண்டுகம கிராமத்தினுள் |
| 24 | ஜா-எல நகரசபை, 1 ம் பிரிவு .. | ஜா-எல நகர சபையின் 1 ம் பிரிவாகிய கனுவானே வடக்கிலுள்ள கனுவானேக் கிராமத்தினுள் |
| 25 | டி 2 ம் பிரிவு .. | ஜா-எல நகர சபையின் 2 ம் பிரிவாகிய ஹெற்றிகமவிலுள்ள வெலிகம்பிட்டிக் கிராமத்தினுள் |
| 26 | அளுத்குறு கோறளை தெற்கு .. | கந்தானேக் கிராமத்தினுள் |
| 27 | டி .. .. | கெறகபொக்குன கிராமத்தினுள் |
| 28 | டி .. .. | திம்பிறிகஸ்யாய கிராமத்தினுள் |
| 29 | டி .. .. | உஸ்வெற்றக்கெய்யாவ கிராமத்தினுள் |
| 30 | மொறட்டுவ நகரசபை 9 ம் பிரிவு .. | மொறட்டுவ நகரசபையின் 9 ம் பிரிவிலுள்ள டிகொறல்லே கிராமத்தினுள் |
| 31 | சியன கோறளை மேற்கு (AP) .. | கறகஹமுனேபஹல கிராமத்தினுள், கடவத்தை–ருகம வீதியின் இருபக்கங்களிலும், கண்டி வீதியிலிருந்து திரும்புமிடத்திலிருந்து 400 யாருக்குக் குறையாத தூரத்தில் |

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. **9** மணி முதல் பி. ப. **4.30** மணி வரையும், **சனிக்கிழமைகளில்** மு. ப. **9** மணி முதல் பி. ப. **1** மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. **3.30** மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் **12** மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் **வேண்டும்.**

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்றிறீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் **வேண்டும்.**

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி.ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி.ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முற்பணமாக கொழும்பு அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் **வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது